# அரசாங்க தகவல் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அற்ற பிரிவு – 02 சேவை மட்டத்திற்கு உரித்தான விநியோக உதவியாளர் (திணைக்களமயப்படுத்தப்பட்ட) பதவிக்காக சேர்த்துக் கொள்ளல்

அரசாங்க தகவல் திணைக்களத்தில் விநியோக உதவியாளர் (திணைக்களத்துக்குரிய) பதவிக்காக இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்ட விண்ணப்பதாரிகளிடத்தில் இருந்து இரு வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தெரிவு செய்யப்படும் முறை:**

01. விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூரணமாக கொண்ட விண்ணப்பதாரிகளில் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் நடாத்தப்படும் எழுத்து மூல போட்டி பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் காட்டப்படும் தகைமை சான்றிதழ்களின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**1.1. எழுத்து மூல பரீட்சை**

| பதவி | பாடங்கள் | மொத்த புள்ளிகள் | சித்தி மட்டம் |
|---|---|---|---|
| விநியோக உதவியாளர் | நுண்ணறிவு | 100 | 40 |
| | பொது அறிவு | 100 | 40 |

**02. தேவையான தகைமைகள்**

2.1. திறந்த முறையில் தெரிவு

2.2. **தேர்ந்தெடுக்கும் தரம்** : 111 ம் தரம்

**2.3. கல்வித்தகைமை :** சிங்களம்/ தமிழ்/ ஆங்கிளம், கணிதம் மற்றும் மேலும் இரு சாதாரண சித்திகளுடன் (C) ஒரே தடவையில் 06 பாடங்களில் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்தியெய்திருத்தல் வேண்டும் **மற்றும்**

க.பொ.த உயர்தர பரீட்சையில் குறைந்தது ஒரு பாடத்திலாவது (01) அல்லது (பொது அறிவு பரீட்சை தவிர்ந்து) சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

**2.4. உடற்றகைமை**

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் ஏதேனும் ஒரு பிரதேசத்தில் வேலை செய்வதற்கும், பதவியின் பணியினை செயற்படுத்துவதற்கும் உகந்த உடல்நிலை மற்றும் உள்ளார்ந்த நிலையினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**2.5. வேறு :**

இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

விசேட குணநலம் பொருந்தியவராக இருத்தல் வேண்டும்.

குறித்த பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக விண்ணப்பிக்கும் போது தேவையான தகைமைகளை குறித்த திகதிக்கு அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**03. வயது :**

3.1. குறைந்த வயது : 18 வயது

3.2. அதி கூடிய வயது : 30 வயது

**04. பதவியின் தன்மை**

இப்பதவி நிரந்தரமானது, ஓய்வுதியத்துடன் கூடியது. குறித்த நபர்கள் ஓய்வூதிய திட்டங்களுக்கு தமது பங்களிப்பை செய்தல் வேண்டும்.

**05. சம்பளம்**

சம்பள இலக்கம் : MN 1 – 2006 A

சம்பள திட்டம் : ரூ.27,140 - 10x300 - 11x350 - 10x495 - 10x660 – 45,540

06. நியமனம் ஒரு வருட வேலை பார்க்கும் (Acting period) காலத்துக்கு உட்பட்டது. அரசாங்க தகவல் திணைக்களத்தின் விநியோக உதவியாளர் பதவியின் IIIம் தரத்துக்கு இணைத்துக் கொண்டு 03 வருடங்களுக்குள் இணைத்துக் கொள்வதற்கான முதல் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியெய்திருத்தல் வேண்டும்.

07. பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன் அடிப்படையில் மற்றும் அத்துடன் தொடர்பான சுற்றறிக்கைகளின் அடிப்படையில் பதவிக்கு உரித்தான மட்டத்தில் மொழி தகைமையினை பெற்றிருத்தல் வேண்டும்.

08. அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறை சட்டத்திட்டங்களுக்கும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிர்வனக் கோவைக்கும், அரசாங்கத்தின் நிதிக்கோவைக்கும், திணைக்களத்தின் மற்றைய சட்டத்திட்டங்களுக்கும் இந்நியமனம் உட்பட்டது.

**09. விண்ணப்பிக்கும் முறை**

1. விண்ணப்பங்கள் ……………… திகதி அல்லது அதற்கு முதல் ‘‘அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, கொழும்பு 05’’ என்ற விலாசத்துக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அதற்கு பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
2. விண்ணப்பிக்க வேண்டிய மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவிப்பின் இறுதியில் காணப்படுகின்றது. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை யு4 அளவிலான தாளில் தயாரித்து தமது சொந்த கையெழுத்தில் நிரப்ப வேண்டும்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை தபால் உறையில் இட்டு, குறித்த தபால் உறையில் வலது பக்க மேல் மூலையில் ‘‘ அரசாங்க தகவல் திணைக்களத்தின் விநியோக உதவியாளர் (திணைக்களமயப்படுத்தப்பட்ட) பதவிக்கு இணைத்துக் கொள்ளல்’’ என்று சுட்டிக்காட்ட வேண்டும்.
4. மாதிரி விண்ணப்பத்தை போன்று அமையாத விண்ணப்ப படிவங்கள், முழுமைபடுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் விடுக்கப்படாமல் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காணாமல் போதல் அல்லது தாமதித்து கிடைத்தல் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**10. பிழையான தகவல்களை வழங்குதல்**

உங்களால் அனுப்பப்படும் விண்ணப்ப படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் ஒன்று பொய்யெனவோ அல்லது பிழையெனவோ சேர்த்துக் கொள்வதற்கு முன்னர் வெளிப்படுத்தப்பட்டால் உமது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அவ்வாறாகவே குறித்த தகவல்களில் ஏதேனும் ஒன்று பொய்யெனவோ அல்லது பிழையெனவோ சேர்த்துக் கொண்டதன் பின்னர் வெளிப்படுத்தப்பட்டால் குறித்த விதிமுறைகளுக்கு அமைய சேவையில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு அம்சம் தொடர்பில் இறுதி தீர்மானம் அரச சேவை ஆணைக்குழுவின் நியதிகளின் அடிப்படையில் மேற் கொள்ளப்படும். அதேபோன்று வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதல் அல்லது வெற்றிடங்களில் சிலவற்றை நிரப்புதல் தொடர்பான இறுதித் தீர்மானம் அரச சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

12. இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிளம் ஆகிய மூன்றில் ஏதேனுமொரு பிரச்சினை எழும் பட்சத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலே ஏற்றுக் கொள்ளப்படும்.

அரச சேவை ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பெயரில்,

அரச சேவை ஆணைக்குழுவின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட

அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க தகவல் திணைக்களம்

2017……………… மாதம்……. ம் திகதி,
அரசாங்க தகவல் திணைக்களம்.
இல. 163, கிருலபனை மாவத்தை
கொழும்பு – 05.

(அலுவலக உயோகத்திற்கு மட்டும்)

# அரசாங்க தகவல் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அற்ற பிரிவு – 02 சேவை மட்டத்திற்கு உரித்தான விநியோக உதவியாளர் (திணைக்களமயப்படுத்தப்பட்ட) பதவிக்காக சேர்த்துக் கொள்ளல்

1. **மொழி:**
   சிங்களம் - 01
   தமிழ் - 02
   ஆங்கிளம் - 03 (ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)
2. **தனிப்பட்ட தகவல்கள்:**
   2.1. முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr./Mrs./Miss. (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்):
   Ex : Mr./Mrs./Miss. SILVA A.B ………………………………………………………
   2.2. முழுப்பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) ……………………………………………
   ………………………………………………………………………………………………
   2.3. முழுப்பெயர் (சிங்களத்தில் / தமிழில்) ………………………………………………................
   ………………………………………………………………………………………………
   2.4. தனிப்பட்ட விலாசம் (ஆங்கிளம்) ……………………………………………………………
   ………………………………………………………………………………………………
   2.5. தனிப்பட்ட விலாசம் (சிங்களம்/ தமிழ்) ………………………………………………………
   ………………………………………………………………………………………………
   2.6. பால் : ஆண் - 0
   பெண் - 1
   (ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)
   2.7. விவாகமானவரா : விவாகமாகாதவர் - 1
   விவாகமானவர் - 2
   (ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)
   2.8. இனம் : (சிங்களம் - 1, தமிழ் - 2, இ.தமிழ் - 3, முஸ்லிம் - 4, வேறு – 5)
   (ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)
   2.9. தேசிய அடையாள அட்டை இல:..............................................................
   2.10. பிறந்த திகதி: ஆண்டு ........................ மாதம் ..................... திகதி ..................
   2.11. விண்ணப்ப முடிவுத்திகதியின் போது வயது:
   ஆண்டு ........................ மாதம் ..................... திகதி ..................
   2.12. தொலைப்பேசி இல. (இருப்பின்) : ……………………………………………..
3. **கல்வித் தகைமைகள் :**
   (அ) க.பொ.த (சா/த) வருடம் : பரீட்சை இல.:

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(ஆ) க.பொ.த (உ/த) வருடம் : பரீட்சை இல.:

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

**4. விண்ணப்பதாரியின் உறுதியுரை:**

மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானவை எனவும் பிழையற்றவை எனவும் உறுதி மொழிகின்றேன்.

…………………………………………………….
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :…………………………….

**5. கையொப்பத்தை உறுதிச் செய்தல்:-**

மேற்கூறப்பட்ட தகவல்களை வழங்கும் திரு/ திருமதி/ செல்வி …………………………….

அவர்களை தான் தனிப்பட்ட ரீதியில் அறிவதுடன், ………………………..ம் திகதி என்

முன்னிலையில் அவர் தனது கையொப்பத்தை இட்டதாகவும் இதன் மூலம் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………………………………...

கையொப்பத்தை உறுதிச் செய்த
அதிகாரியின் கையொப்பம்

பெயர்:-…………………………………………

வகிக்கும் பதவி:-……………………………….

விலாசம்:-………………………………………

திகதி:-…………………………………………

(பாடசாலை அதிபர், சமாதான நீதவான், பதிவத்தாட்சகர், நீதிபதி, நொதாரிசு, முப்படைகளின் அதிகாரம் பொருந்திய அதிகாரி அல்லது ரூ22,935 அல்லது அதற்கு மேலதிக மாதாந்த வருமானம் பெறும் அரசாங்க நிரந்தர பதவி வகிக்கும் அதிகாரி ஒருவரால் அத்தாட்சி படுத்த முடியும்)